[1981 மார்ச் 6]

றார்களோ அவர்களால் 100 கிலோ, 200 கிலோ ஷார்ட்டேஜ் வந்தாலும் நடவடிக்கை எடுப்பதில்லை; சமாளித்து விடுகிறார். இந்தத் தவறுகள் சம்பந்தமாக என்னிடம் '' போட்டோ ஸ்டேட் காப்பி '' எல்லாம் இருக்கிறது; வேண்டுமென்றால் அமைச்சரிடம் தருகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆதாரங்களையும் அரசுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் மீண்டும் விசாரணை நடத்த அரசு உத்தரவிடும்.

காவிரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம்.

*வினா எண். 408—திரு. கே. நாராயணசாமி: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை, காவேரி ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) திட்டத்தின் மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) சென்னை குடிநீர் வசதியை பெருக்க, திருச்சி மாவட்டம், கட்டளைப் பகுதியிலிருந்து காவேரி நதிநீரை கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) ( ) கட்டளைப் பகுதியிலிருந்து செம்பரம்பாக்கம் வரை நீர் கொண்டு வர—( ) ரூபாய் 203 கோடி (தலைமைப் பொறியாளர் நீர்ப்பாசன மதிப்பீடு)

(ii) ரூபாய் 259 கோடி (உலக வங்கி மதிப்பீடு முறையில்.)

(b) செம்பரம்பாக்கத்திலிருந்து சென்னை நகருக்கு நீரை, சுத்திகரித்து கொண்டுவர ரூபாய் 200 கோடி.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, திருச்சி, குளித்தலை, லால்குடி பகுதிகளைச் சேர்ந்த பெரும் விவசாயிகள் என்ற பேரால் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) அவர்களையும் இந்தத் திட்டத்தை கைவிட வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்களா? அரசினுடைய நோக்கம் என்ன? இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா? அதிலே தீவிர கவனம் செலுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே திட்டத்தைச் செயல்படுத்துவதாகத்தான் இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கட்டளைக் கால்வாய்த் திட்டத்தினால் தண்ணீர் திறந்தவெளி வாய்க்கால் மூலம் சென்னைக்கு கொண்டுவரப்படுவதால் வழியிலே விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. அது தடுக்கப்படுமா? குடிநீரைக் குழாய்கள் மூலம் கொண்டு வந்தால் பாதுகாப்பாக இருக்கும். திறந்தவெளி வாய்க்கால் மூலம் கொண்டு வருவதால் அதிலே அசுத்தங்கள் கலந்து, பொதுமக்களுக்கு வியாதி பரவும் சூழ்நிலை ஏற்படும். அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, திறந்தவெளி வாய்க்கால் மூலம் கொண்டுவரப்படும் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டுத்தான் விநியோகம் செய்யப்படும். திறந்தவெளி வாய்க்கால் மூலம் தண்ணீர் வந்தாலும் யாரும் தங்களுக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நம் மக்கள்மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறது இந்த அரசு.

திரு. கே. நாராயணசாமி : தலைவரவர்களே, இந்தக் கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை அரசுத் துறை எடுத்து செயல்படுத்தும் நடவடிக்கை இருக்கிறதா அல்லது கான்ட்ராக்ட் விட உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே அது செயலபடுத்தப்படும்போது முடிவு எடுக்கப்படும்.

சென்னையில் பாதாள இரயில் பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 409—திரு. து. புருஷோத்தமன், திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகர பாதாள இரயில் பாதை அமைப்புத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) சென்னையில் பாதாள இரயில் பாதை அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால், சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து மயிலாப்பூர் லஸ் வரை இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தி